**வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை**
**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 a+d; 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

#### (ஆ) கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | இனிவருங் காலங்களில் அவை கணக்கறிக்கையுடன் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் |

**(இ) கணக்கீட்டுக் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா.111,213,002 பெறுமதியான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் நாளதுவரை செய்யப்பட்டிருக்கவில்லை | சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் பெறுமதி மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு பெறுமானத்தேய்வு தொடர்பில் பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 57,033,764 பெறுமதியான காணிகட்டிடங்களுக்கு காணி உரிமைப்பத்திர சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி கட்டிடங்களுக்கு காணி உரிமப்பத்திரங்கள் பெறுவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 93ஆம் பிரிவு | | சபையினால் சட்ட ஏற்பாடுகள் மூலம் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | வருடாந்த திட்டத்தினுள் கழிவு முகாமைத்துவம் உள்ளடக்கப்பட வேண்டும் | வாகன வசதி மற்றும் ஆளணி குறைவாக உள்ளமையால் பெருந்தொகையில் குப்பைகளை சேகரிக்க முடியாமல் உள்ளது.. |
| (ஆ) 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளுராட்சி அதிகார சபைகளின் நிறைவேற்றப்பட்ட இடைக்கால சட்ட | | திண்ம கழிவு முகாமைத்துவ தொடர்பில் வருடாந்தம் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த திட்டத்தினுள் கழிவு முகாமைத்துவம் உள்ளடக்கப்பட | தற்போது தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏற்பாடுகளின் XI மற்றும் XII ஆம் பகுதிகள் | | | வேண்டும் | |
| (இ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | | திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அதிகாரச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும் | இனிவருங்காலங்களில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ)1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக ஒழுங்கு விதிகள் | | | | |
| (i) விதி இலக்கம் 178(3) | | பொருட்களை வழங்குவதற்காக நிறுவனங்களின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்பட வேண்டும் | பொருட்களை வழங்குவதற்காக நிறுவனங்களின் நிரல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) விதி இலக்கம் 218 | | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறை தவிசாளரினால் சோதனை செய்விக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்பட வேண்டும் | தவிசாளரினால் தற்போது பார்வையிடப்பட்டு வருகின்றது. |
| (iv) விதி இலக்கம் 33 | | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்பட வேண்டும் | ஆதனவரி அறவிடும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும். |
| (v) பாகம் III இன் பிரிவு 32 | | மீளாய்வாண்டிற்கான ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காமை | பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்பட வேண்டும் | ஆதனவரி அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | | |
| (i) நிதி ஒழுங்குவிதி 110 | | நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நட்டங்கள் தொடர்பான பதிவேடு பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) நிதி ஒழுங்குவிதி 571 | 96,696 | காலங்கடந்த வைப்புக்கள தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) நிதி ஒழுங்குவிதி 891 | | பிணைப் பண இடாப்பு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிணைப்பண இடாப்பு தற்போது பேணப்படுகின்றது. |
| (ஊ) மாகாண நிதி ஒழுங்குவிதி 163.3 | 12,999 | முற்பண நிலுவைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிதி ஒழுங்கு விதிக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சீர் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |
| (எ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | | ஓவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை எரிபொருளினால் தாங்கியை பூரணமாக நிரப்பி ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் நுகர்வினை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | இயங்கும் நிலையில் உள்ள வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

### 1.4.2 வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் போதான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவானது பெறுகை வழிகாட்டி நெறிகள் -2006 இன் 5:4:12 இன் பிரகாரம் பண்டங்கள் அல்லது கட்டுமான வேலைகள் மீதான பெறுமதி சேர் வரித்தொகையானது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு/ வழங்குனர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான ஒரு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். 02 வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ரூபா 783,364 பெறுமதியான சேர் பெறுமதி வரி தொடர்பான கொடுப்பனவுகள் தொடர்பில் நாளது வரைக்கும் கணக்காய்விற்கு அறியப்படுபத்தியிருக்கவில்லை | பெறுமதி சேர் வரி மற்றும் பெறுகை வழிகாட்டி நெறிகளின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | பெறுமதி சேர் வரி கொடுப்பனவுகள் தொடர்பாக நடவடிக்கை எதுவும் கடந்த ஆண்டு கணக்காய்விற்கு அறியப்படுத்தியிருக்கவில்லை. இவ்வருடம் தை மாதம் தொடக்கம் மேற்படி நடைமுறை பின்பற்றப்படுகின்றது |

## 2. நிதிசார் மீளாய்வு

---------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,723,209ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,955,022 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

------------------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

----------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல. | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 5,083,000 | 8,193,746 | 5,428,263 | 2,765,483 | 4,270,000 | 6,248,305 | 5,174,410 | 1,073,895 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 940,000 | 793,166 | 793,166 | - | 725,000 | 3,390,165 | 3,390,125 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,237,000 | 11,709,798 | 5,902,629 | 5,807,169 | 8,265,000 | 14,530,648 | 9,645,776 | 4,884,872 |
| | மொத்தம் | **15,260,000** | **20,696,710** | **12,124,058** | **8,572,652** | **13,260,000** | **24,169,118** | **18,210,351** | **5,958,767** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

--------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| அ) | அரசிறை கடனாளிகளிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 9,999,346 தொகை 31 திசெம்பர் 2018 வரை அறவிட நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அரசிறை கடனாளிகளிடம் இருந்து பெற வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும் | அரசிறை நிலுவைகள் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 8,572,652 வருமான நிலுவைகள் அறவிட சபையினால் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமான நிலுவைகள் அறவிட சபையினால் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | குத்தகை நிலுவைகள் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் எல்லைக்குட்பட்ட வாகன வாடகை நிலுவைகள் ரூபா 1,109,057தொகை கடந்த 2016 தொடக்கம் 2018 ஆண்டு வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து வாகன வாடகையை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |
| (ஆ) | சபையின் எல்லைக்குட்பட்ட கடைகளின் குத்தகை நிலுவை ரூபா 370,673 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை கடை வாடகை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,326,452 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நீதிமன்ற தண்டப்பணம் உரிய ஆண்டில் எம்மால் கோரப்பட்டும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. |

**(ஆ) முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | முத்திரைக் கட்டணங்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | முத்திரைக்கட்டணங்கள உரிய ஆண்டில் எம்மால் கோரப்பட்டும் எமக்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 500,000 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | | இதுவரை கிடைக்கவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம்,30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்படவேண்டும் | வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும் | சபையின் செயல் நடவடிக்கைத் திட்டம் 2018 இல் தயாரிக்கப்படவில்லை. 2019 இல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

திண்மக் கழிவுகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான முறையில் திண்மக்கழிவு முகாமைத்துவம் | உரிய இடத்திற்கு அனுமதி பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ii) | குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை | தயாரிக்கப்பட்டு கழிவுகள் வெவ்வேறாக | நிதி மூலங்கள் மற்றும் வாகன வசதி கிடைக்கும் போது செயல்படுத்தப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டுவரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படவில்லை | ஒழுங்குப்படுத்தி மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தி | நிதி மூலங்கள் மற்றும் வாகன வசதி கிடைக்கும் போது செயல்படுத்தப்படும |
| (iv) | சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள கடைகள் குடியிருப்பாளருக்கு குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தி உறைகளில் இட்டு எடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சூழலுக்கு பாதிப்படையாதவாறு செயற்படுத்தி இயற்கை உரம் தயாரித்தல் | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (v) | திண்மகழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை | நடவடிக்கைகளை மேற்கொள்ளபட வேண்டும். | உத்தியோகத்தர்களிற்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சபையின் தயார்நிலைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சபையின் தயார் நிலைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையினால் பொருத்தமான ஒப்பந்தகாரரினை நியமிக்காததினால் நீதிமன்ற செலவாக ரூபா 903,779 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பொருத்தமான ஒப்பந்தகாரரினை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த வீதி வேலைக்குரிய ஒப்பந்ததாரர் உரிய பெறுகை நடைமுறைகளுக்கமைவாகவே தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை அறியத்தருகின்றேன். |
| **(ஆ)** | கடன் கொடுத்தோருாக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபா174,673 தொகை 31 திசெம்பர் 2018 வரை செலுத்தி தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | கடன் கொடுத்தோருக்கு கொடுத்து தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிடிபணமானது சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்குக்கு மாற்றப்பட்டது. 2019 இல் இக்கணக்கு சீர்செய்யப்பட்டுள்ளது. |
| **(இ)** | மீளாய்வாண்டில் சபையின் NP ZD 2168 இலக்க வாகனத்திற்கு வரி அனுமதிபத்திரம் பெறும் போது சபையினால் தண்டப்பணமாக ரூபா 22,480 செலுத்தப்பட்டிருந்தது | உரிய காலத்தில் வாகன வரி அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும | வாகன வரி அனுமதிப் பத்திர நிலுவைக்கட்டணத்தை செலுத்தி அனுமதிப் பத்திரம் பெறப்பட்டது. இதனால் 2007 -2018 வரையான காலத்திற்கு தண்டமாக 22,480 செலுத்தவேண்டி எற்பட்டது |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) பதவி வெற்றிடங்கள்** | | |
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 10 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பபட்டிருக்கவில்லை. | ஆளணி வெற்றிடங்கள் நிரப்பபடவேண்டும் | பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் அவர்களிடம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது |
| **(ஆ) ஊழியர் பிணை வைப்புக்கள்** | | |
| சபையில் மாற்றலாகி சென்ற 02 அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 37,000 பிணைப்பண வைப்புக்கள் தொடர்பாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பண வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பாவனைக்குட்படுத்தாத 06 வாகனங்களினை உரிய நடைமுறையை பின்பற்றி பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நாளதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்துவதற்கு அல்லது அழிப்புச் செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் | வாகன உரிமை மாற்றம் செய்து அழிப்புக்குள்ளாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

#### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபைக்குரிய காணிகள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கிரமமான காணிகள் மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமையை உறுதிப்படுத்தல் | சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி கட்டிடங்களுக்கு காணி உரிமப்பத்திரங்கள் பெறுவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | | |
| **(ஆ)** | சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த 10 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை | சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிமம் மாற்றம் செய்யப்படாத 12 வாகனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |

**3.4.3 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

-----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கடைத்தொகுதிகளின் கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் அதனை பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் அறியக் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். | சபையின் குருக்கள்புதுக்குளம் சந்தைக்கடைத் தொகுதி மற்றும் கனேசபுரம் கடைத்தொகுதி என்பன சபையால் 2018 இல் கேள்வி கோரப்பட்டும் எவரும் எடுக்காமையால் பயன்படுத்தாத சொத்துக்களாக உள்ளது. |

**3.4.4 வருடாந்த பொருள மெய்மையாய்வு**

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதி இல 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையினது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் வருடாந்த பொருட்கணக்கெடுப்பு சபையினால் அறிக்கையிடப்பட்டு பொருட்கள் அழிக்கப்பட்ட போதும் அவற்றிற்கான பதிவழித்தல் கட்டளை பெறப்படவில்லை. தற்போது அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 964,484 தொகையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 இற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. இனிவரும் காலங்களில் பெறுகைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 5,310 தொடக்கம் 7,311,169 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும் | நிரப்பப்படாத ஆளணியினருக்கான செலவீனமே 7,311,169 வேறுபாட்டுத் தொகையாக உள்ளதுடன். செலவுகள் சபையின் வருமான வீதத்தின் அடிப்படையிலேயே செய்யப்படுவதால் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்கள் உரிய ஆண்டுக்குள் கிடைக்கமையால் செலவுகளும் மட்டுப்படுத்தப்பட்டு செய்யப்பட்டுள்ளது. |